Arimaa Nokku

# அரிமா நோக்கு

13:4 சனவரி 2020

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி. இலக்கியம். கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா நோக்கு
13 : 4 சனவரி 2020

அக்கிதம் அச்சுதன் நம்பூதிரி
- வ. ஜெயதேவன் 03

சிலப்பதிகாரத்தில் புலம்பெயர்வு
- பெ. சுபாசு சந்திரபோசு 05

தொல்காப்பியத்தில் 'ஐ'யின் பயன்பாடு
- சு. சந்திரலேகா 11

உத்தமசோழன் படைப்புகள்: திணையியல் நோக்கில் வண்டல் வாழ்வியல்
- சு. மாதவன் 15

கலித்தொகைக் கவிதை மொழியில் வண்ணச்சினைச் சொற்கள்
- க. மாரிமுத்து 32

தமிழ்ச்செம்மல் ச.வே.சு.வின் தமிழ்ப்பணி
- தி. கமலி 36

சுகவாரி
- வெ. இராம்ராஜ் 42

நாடக வேந்தர் இரணியல் கலைத்தோழனின் நாடகங்களில் அரசியல் கருத்துக்கள்
- சா. கலைப்புனிதன் 46

தமிழ் யாப்பியல் வளர்ச்சி வரலாறு: கலாநிதி நா. சுப்பிரமணியத்தின் பங்களிப்பு
- ம. அ. மணிமேகலை 49

எண்ணெண் கலையோர்
- க. நர்மதா 55

The Pleasure of Books
-William Lyon Phelps 60

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தேர்வுப் பிழையாடல்கள்

தேர்தல் திருவிளையாடல்களால் மக்களாட்சியம் அவலக் கவலைகளுக்கு ஆளாவதுபோலத் தேர்வுப் பிழையாடல்களால் கல்வி திகைத்துத் திண்டாடுவதைக் கண்டு வருந்தாதவர் யாரும் இருக்க முடியாது.

தேர்வுகள் கல்வி ஒளியைத் தூண்டிவிட வேண்டும். ஆனால் அந்த முயற்சியில் கற்கும் மாணவர் பொக்கென்று அணைந்து போய்விடக் கூடாது. நடைமுறையில் தேர்வுகள் மாணாக்கர்மீது தொடுக்கப்படும் வன்முறைத் தாக்குதல்களாகவே அஞ்சப்படுகின்றன.

கல்வியில் தேர்ச்சி அடைதலும் தேர்வில் தேர்ச்சி அடைதலும் வேறுவேறாக இருப்பது எவ்வகையில் அறிவு அறம்? என்ன தெரிந்துகொண்டாய் என்பதைவிட எவ்வளவு மதிப்பெண் பெற்றாய் என்பது கல்வியின் கவலை தரும் முரண்பாடு நிலை வினாவானதேன்? கல்வி எல்லார்க்கும் பொது உரிமை என்னும் மக்களாட்சிய மாண்பை மாய்த்து ஒழிக்கவா தேர்வுமுறைகள் பயன்படவேண்டும்?

அண்மையில் தமிழக அரசு 5ஆம் வகுப்பிற்கும் 8ஆம் வகுப்பிற்கும் ஏற்கெனவே அறிவித்திருந்த மாணவர்கள் பணம் கட்டி எழுதவேண்டும் என்ற முடிவைக் கைவிடுவதாக அறிவித்ததை எவரும் வரவேற்கவே செய்தனர்.

கட்டணமில்லாக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை எம்மாணவரையும் அடுத்த வகுப்புக்குச் செல்வதைத் தடுக்கமுடியாது. அவ்வுரிமையால் கல்வித் தரம் கீழிறக்கம் ஆகிறதென்று இந்திய நடுவண் அரசு 5ஆம் வகுப்பிற்கும் 8ஆம் வகுப்பிற்கும் பொதுத்தேர்வுகள் நடத்துவதற்கான சட்டத்திருத்தத்தை 2018ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இதன்படி பொதுத்தேர்வுகளை முற்றா இளம்பிறைகளும் எழுதியாக வேண்டும்; அவற்றில் தோற்கடிக்கப்பட்டவர்கள் முடிவு வந்த இரு மாதங்களுக்குப்பின் மறுதேர்வுகளை எதிர்கொள்ளவேண்டும் என்றும் அவற்றிலும் தோல்வி கண்டால் அதே வகுப்பில் மீண்டும் ஓராண்டு பயிலவேண்டும் என்றும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்நடைமுறைகளைப் பின்பற்றுவது குறித்த முடிவை மாநில அரசுகள் வடிவமைத்துக்கொள்ளலாம் என்றும் நடுவண் அரசு அறிவித்தது.

ISSN 2320-4842

நடுவண் அரசு வகுத்தவாறே பொதுத்தேர்வுகளைப் புகுத்த முற்பட்டது தமிழக அரசு. இப் பொதுத்தேர்வு முறைகளைக் கல்வியாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள், ஊடகத்தினர் எல்லோருமே ஒருமுகமாக ஒன்றுதிரண்டு எதிர்த்தனர். கல்வி முயற்சியில் மாணவர் இடைக்கண் நின்றுபோதல் நிகழும் என்றும் இளஞ்சிறு மாணவர் தாங்கவொண்ணா மன அழுத்தத்திறகு ஆளாவர் என்றும் பலரும் பல கோணங்களில் இத்திட்டம் உடனே கைவிடப்படவேண்டும் என்பதை வற்புறுத்தினர்.

போதிய ஆசிரியர் இன்மை, தகுந்த கட்டட வாய்ப்பின்மை, அடிப்படைக் கட்டமைப்பின்மை, ஆய்வுக்கூடமின்மை, நூலகமின்மை இப்படிப் பல்வேறு இன்மைகளுக்குத் தீர்வுகள் காணாமல் தளிர்நிலைப்பருவமாணவர் கல்வி வளர்ச்சிக்கு ஒவ்வா வகையில் வேருக்கு வெந்நீர் விடும் வேலையை நிறுத்தியதற்காகத் தமிழக அரசைப் பாராட்டலாம். ◆

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதா லட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

வாழ்நாள் கட்டணம் ரூ. 3000/- US $ 150

புரவலர் கட்டணம் ரூ. 5000/- US $ 200

பெரும்புரவலர் கட்டணம் ரூ. 10, 000/- US $ 500

நிறுவனம்சார் உறுப்பினர் (Institutional Membership) ரூ. 15,000/- US $ 700

### விளம்பரக் கட்டணம்

பின்னட்டை (பல வண்ணங்கள்) ரூ. 15, 000/-

உள்ளட்டை (பல வண்ணங்கள்) ரூ. 10, 000/-

முழுப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 3, 000/-

அரைப்பக்கம் (கருமை & வெண்மை) ரூ. 1, 500/-